RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 272 | அக்டோபர் 5, 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# “இவ்வளவு காலம் நம்மை ஏமாற்றியவர்களை புறந்தள்ளுங்கள்” - விஜய் வேண்டுகோள்

சென்னை: அக்.5-

‘மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், இவ்வளவு காலமாக நம்மை ஏமாற்றி வந்த, தீய சக்தியையும், தீர்ந்துபோன சக்தியையும் புறந்தள்ளுங்கள்’ என தவெக தலைவரும், தமிழக முதல்வருமான விஜய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘என் நெஞ்சில் குடியிருக்கும் அனைவருக்கும் வணக்கம். கடந்த சட்டமன்றத் தேர்தலில், யாருக்கும் வழங்கிடாத பேரன்பையும், பெருவாரியான வாக்குகளையும் நமக்கு வாரி வழங்கி, வாகை சூடும் வரலாற்றைத் திரும்ப வைத்து, உங்களின் முதல் சேவகனாக என்னை அமர்த்திய உங்களுக்கு என் நன்றிக் கடனைத் திருப்பி அளிக்கும் நேரமிது.

உண்மையான மனசாட்சியுள்ள மக்களாட்சியை அமர்த்திய தமிழக மக்கள் அனைவருக்கும் எவ்வளவு நன்றி சொன்னாலும் அது மிகையாகாது.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பது, தமிழக மக்களாகிய உங்கள் தலைமையிலான ஆட்சி. இந்த ஆட்சி தொடர்ந்திட, மென்மேலும் வலுப்பெற உங்கள் ஆதரவு எப்போதும் தேவை.

கடந்த 25ஆம் தேதி (25.09.2026) மதுராந்தகம் தொகுதியிலும், 30ஆம் தேதி (30.09.2026) தாராபுரம் தொகுதியிலும் இடைத்தேர்தலுக்காக நாம் பரப்புரை மேற்கொண்டோம். இதனைத் தொடர்ந்து கடந்த 2ஆம் தேதி (02.10.2026) மதுராந்தகம் தொகுதியிலும், இன்று (04.10.2026) தாராபுரம் தொகுதியிலும் வாகனப் பிரசாரம் மேற்கொண்டோம்.



இந்த இடைத்தேர்தல் பரப்புரைக்காக நாம் வந்தபோது, செங்கல்பட்டு மாவட்ட மக்களும், கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட மக்களும் நமக்களித்த வரவேற்பும், நம்மிடம் காட்டிய அன்பும் பாசமும் எதற்கும் நிகரில்லாதது. எக்காலத்திற்கும் என் நெஞ்சில் நிலைத்திருக்கக் கூடியது. இதற்காக எவ்வளவு நன்றி சொன்னாலும் அது மிகையாகாது. இதற்காக உங்களுக்கு வாழ்நாள் கடமைப்பட்டுள்ளோம்.

நடைபெற உள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், இவ்வளவு காலமாக நம்மை ஏமாற்றி வந்த, தீய சக்தியையும், தீர்ந்துபோன சக்தியையும் புறந்தள்ளுவீர்கள்; மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி சார்பில் போட்டியிடும் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்களை ஆதரிப்பீர்கள்;

மதுராந்தகம் தொகுதி மரகதம் குமரவேல் மற்றும் தாராபுரம் தொகுதி சத்தியபாமா ஆகியோருக்கு வெற்றிச் சின்னமாம் நமது விசில் சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை அளிப்பீர்கள் என்பதை இந்த நாடறியும். அதற்காக நான் முன்கூட்டியே உங்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

மேலும், இந்தத் தேர்தல் பரப்புரை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள், தேர்தல் பொறுப்பாளர்கள், அமைச்சர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், முழு ஒத்துழைப்பு நல்கிய தன்னார்வலர்கள் குழு, காவல் துறையினர், மருத்துவக் குழுவினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

தமிழ்நாட்டு மக்களுக்கான முதன்மை சக்தியான நாம், மக்கள் நலன்களைக் காப்பதற்காக, எதிலும், எப்போதும் சமரசம் செய்துகொள்ளவே மாட்டோம். லஞ்சம், ஊழலற்ற நேர்மையான நிர்வாகத்துடன் மனசாட்சி உள்ள மக்களாட்சியை இப்போது போலவே எப்போதும் தொடர்வோம். மீண்டும் நினைவூட்டுகிறோம்.

தாராபுரம் மற்றும் மதுராந்தகம் தொகுதி மக்களே, நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டிய ஒரே சின்னம் உங்கள் வெற்றிச் சின்னமான விசில் சின்னம் என்பதை மறந்துவிடாதீர்கள்.’ எனத் தெரிவித்துள்ளார்.

# “திமுக–அதிமுக கூட்டணி என்று சொல்லி ஏமாற்றப் பார்க்கிறார்கள்” – ஸ்டாலின்

சென்னை: அக்.5-

தாராபுரம் மற்றும் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலையொட்டி ஸ்டாலின் சமூக வலைதளங்களில் காணொளி வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:

“வாக்காளப் பெருமக்களுக்கு வணக்கம். தேர்தல் முடிந்து நான்கு மாதங்கள்தான் ஆகின்றன. அதற்குள் உங்கள் தொகுதி இடைத்தேர்தலைச் சந்திக்கிறது. இந்த இடைத்தேர்தலுக்கான அவசியம் என்ன என்பதை ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள்.

இந்நேரம் எல்லா தொகுதிகளிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளுக்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், உங்களுக்கு உண்மையாக இருப்பார் என்று நினைத்து நீங்கள் தேர்ந்தெடுத்த வேட்பாளர் என்ன செய்திருக்கிறார்?

மீண்டும் உங்களிடமே வாக்கு கேட்டு வந்து நிற்கிறார். அவரது இந்தச் செயலில் ஏதாவது நியாயம் இருக்கிறதா? கொள்கை நேர்மை இருக்கிறதா? ஒரு துளியாவது உங்கள் நலன் இருக்கிறதா?

வாக்களித்த உங்களது தன்மானத்தை விலைபேசி, ஆளுங்கட்சியின் குதிரைபேரத்துக்குத் துணைபோனவர்களுக்கு நீங்கள் என்ன பதிலடி தரப்போகிறீர்கள்? வாக்குகளுக்காக உங்களை மீண்டும் ஏமாற்ற அவர்கள் சொல்லும் கட்டுக்கதைகளையும் பொய்களையும் நம்பப் போகிறீர்களா?




உங்கள் தொகுதியில் ஆளுங்கட்சி வேட்பாளராகப் போட்டியிடுபவர், பெட்டி வாங்கிவிட்டு உங்களிடம் நடிப்பதற்கு என்ன காரணம் சொல்கிறார்? ஆளுங்கட்சியில் சேர்ந்தால்தான் மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்று நடிக்கிறார்கள். அதுவா உண்மை?

ஆளும் கட்சியாக இருந்தால்தான் நல்லது செய்ய முடியும் என்றால், எல்லா ஆட்சியிலும் எதிர்க்கட்சிகளில் இருக்கும் அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஆளுங்கட்சிக்குச் சென்றிருக்க வேண்டுமே.

எதிர்க்கட்சி உறுப்பினர் பிரதிநிதித்துவப்படுத்தும் தொகுதி என்பதற்காக எந்த ஓர் அரசும் அந்தத் தொகுதியைப் புறக்கணிக்க முடியாது என்பதுகூட உங்களுக்குத் தெரியாது என்று நினைத்து ஏமாற்றப் பார்க்கிறார்களா?

அடுத்து, திமுக.வும் அதிமுக.வும் கூட்டணி அமைக்க முயன்றதாக இல்லாத ஒரு கதையைச் சொல்லி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். உண்மையில், தன்னை வளர்த்து ஆளாக்கிய கட்சியையே ஒழிப்பதற்கு ஆளுங்கட்சி வேட்பாளர் செய்த துரோகத்தின் விளைவுதான் இந்த இடைத்தேர்தல்.

இங்கு பிரச்சாரத்திற்கு வந்த முதல்வர் விஜய் தொடங்கி அமைச்சர்கள் வரை யாராவது, “நாங்கள் வாக்குறுதி அளித்த மகளிருக்கான 2,500 ரூபாயைக் கொடுத்துவிட்டோம்; ஆண்டுக்கு ஆறு சிலிண்டர்களை உங்களுக்கு வழங்கிவிட்டோம் பாருங்கள்” என்று சொல்லி வாக்குக் கேட்டார்களா? இல்லையே.

ஏனென்றால், த.வெ.க. ஆட்சி என்பது மக்களாகிய உங்களுக்கு நன்மை செய்வதற்காக அமைந்த ஆட்சி அல்ல; மாஃபியா கும்பல்கள் தமிழகத்தை கொள்ளையடிப்பதற்காக அமைந்துள்ள ஆட்சி. தமிழகத்தை பின்னோக்கி அழைத்துச் செல்லப் போகிறார்கள்.

விலைவாசியைக் கட்டுப்படுத்தச் சொன்னால், முதல்வர் விஜய், ஜோசியரின் ஆலோசனையைக் கேட்டு 1,200 கோடி ரூபாயில் தலைமைச் செயலகம் கட்டுவார். விவசாயிகள், மீனவர்கள், அரசு ஊழியர்கள் போராடினால் அதைப் பற்றிக் கவலைப்படாமல் லண்டனுக்குச் சென்று கார் பந்தயம் பார்ப்பார்.

கொத்துக் கொத்தாகக் கொலைகள் நடந்தால் அதைப் பற்றிக் கவலைப்படாமல் “சிங்கப்பெண் படை” என்று ரீல்ஸ் வெளியிடுவார். இப்போதைக்கு அவர்களது கவனம் முழுவதும், ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக எப்படி சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கலாம் என்பதில்தான் இருக்கிறது.

எனவே, நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது ஒன்றுதான். பிரச்சாரத்திற்கு வந்த ஆளுங்கட்சி வேட்பாளர்களை ஊருக்குள்ளேயே அனுமதிக்காமல் எப்படி விரட்டினீர்களோ, அதேபோன்று வரும் 6-ம் தேதி உங்கள் வாக்குகளால் அவர்களுக்குத் தோல்வியைக் கொடுத்து விரட்டியடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்களுக்கு எப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்தாலும் ரீல்ஸ் போட்டும், பொய்யான கதைகளைச் செய்திகளாக்கியும் மக்களை ஏமாற்றிவிடலாம் என்று நினைக்கும் தவெக.வுக்கு, மக்களாகிய நீங்கள் இந்தத் தேர்தலில் ஏமாற்றத்தைத் தர வேண்டும்.

உங்களுக்காகவும், தொகுதியின் வளர்ச்சிக்காகவும், மிக முக்கியமாக உங்களுக்கு உண்மையாக இருந்து மக்கள் பணியாற்றவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தாராபுரத்தில் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மதுராந்தகத்தில் போட்டியிடும் வழக்கறிஞர் இ.பரந்தாமனுக்கும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

# “இந்திய பொருளாதாரத்தின் அடிப்படைகள் வலுப்பெற்று வருகின்றன”

புதுடெல்லி: அக்.5-

இந்திய பொருளாதாரத்தின் அடிப்படைகள் வலுவாக இருப்பதோடு, வலுப்பெற்றும் வருகின்றன என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்ற கவுடல்யா பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய நிர்மலா சீதாராமன், “மாற்றங்கள் நிறைந்த காலத்தில், இந்திய பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையை இழக்காமல், அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளும் திறனுடனும், அடுத்த அதிர்ச்சி வரும்போது அதையும் சமாளிப்பதற்கான திறனையும்



கொண்டிருக்கிறது.

இந்திய பொருளாதாரத்தின் மீள்திறன் என்பது, உண்மையில் நிகழாத விளைவுகளில் உள்ளது. அதாவது, வலுப்பெறாத பணவீக்கம், எரிபொருள் நிலையங்களில் உருவாகாத வரிசை, வெளிப்படாத வங்கி நெருக்கடி, திணிக்கப்படாத நிதிக் கொள்கை திருத்தம் ஆகியவற்றில் இருந்தே நமது பொருளாதார மீள்திறனை நம்மால் மதிப்பிடலாம்.

இத்தகைய எதிர்நிலை உண்மைகளும், முக்கிய வளர்ச்சி விகிதத்தைப் போலவே பொருளாதார வல்லுநர்களின் கவனத்துக்கு உரியவை.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஏற்பட்ட அதிர்ச்சிகளை, தனது அடிப்படைகள் சிதையாமல் இந்தியா சமாளித்துள்ளது. 2026-27ம் நிதி ஆண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.8 சதவீதம். கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நுகர்வோர் விலைக் குறியீட்டுப் பணவீக்கம் 4.82 சதவீதம். முதல் காலாண்டில் நடப்புக் கணக்கு பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5 சதவீதம். அந்நிய செலாவணி கையிருப்பு 766 பில்லியன் டாலர். இவை நமது பொருளாதார மீள்திறனைக் காட்டுகின்றன.” என தெரிவித்தார்.




# தமிழகத்தில் இலவச கல்வி, மருத்துவ சேவைகள் விரிவாக்கம்!

## “வளமான தமிழகத்தை உருவாக்க உறுதி” – சத்குரு மதுசூதன் சாய்

மதுரை, அக்.5-

தமிழகத்தில் இலவச கல்வி மற்றும் மருத்துவ சேவைகளை மேலும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாக ‘ஒன் வேர்ல்ட் ஒன் ஃபேமிலி மிஷன்’ நிறுவனர் சத்குரு ஸ்ரீ மதுசூதன் சாய் தெரிவித்தார்.

மதுரையில் நடைபெற்ற ‘இதயத்திலிருந்து இதயத்திற்கு உரையாடல்’ நிகழ்ச்சியில், தொழிலதிபர் ஹரி தியாகராஜன் எழுப்பிய கேள்விகளுக்கு சத்குரு மதுசூதன் சாய் கூறியதாவது:

கர்நாடக மாநிலம் சிக்கபள்ளாப்பூர் மாவட்டம் முட்டேனஹள்ளியை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ‘ஒன் வேர்ல்ட் ஒன் ஃபேமிலி மிஷன்’ சார்பில், தருமை ஆதீனத்தின் ஒத்துழைப்புடன் மயிலாடுதுறையில் 60 படுக்கைகள் கொண்ட இலவச பல்துறை மருத்துவமனை அமைக்கப்பட்டு வருகிறது. தாய்-சேய் நலம், குழந்தைகள் மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இலவச மருத்துவ சேவைகள் வழங்கப்படும்.

மேலும், தென்காசியில் இலவச குருகுலம் தொடங்கவும், திண்டுக்கலில் செயல்பட்டு வரும் ஸ்ரீ சத்ய சாய் மீனாட்சிநிகேதன் குருகுலத்தை பல்கலைக்கழக அளவுக்கு உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

“வளமான தமிழகத்தை உருவாக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். இதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவை. கல்வி என்பது ஒவ்வொரு குழந்தையின் உரிமை. குழந்தைகளுக்கு சேவை செய்வதே சமூக சேவை” என்று அவர் தெரிவித்தார்.

செல்வந்தர்கள் தங்கள் செல்வத்தின் ஒரு பகுதியை சமூகத்துக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றும், இந்தியாவின் தாராள மனப்பான்மை கொண்ட கலாசாரத்தைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கல்வியில் பாரம்பரிய ஆன்மிகக் கருத்துகளுக்கும் இடமளிக்க வேண்டும் என்றும், ஆன்மிக உணர்வு குழந்தைகளின் மனதில் ஆழமாகப் பதிந்தால் அவர்கள் தவறான பாதையில் செல்லாமல் நல்ல வழியில் பயணிப்பார்கள் என்றும் சத்குரு தெரிவித்தார்.

தமிழகத்தில் ஏற்கனவே சேவை

திண்டுக்கல் மற்றும் கொடைக்கானலில் மதிப்புசார் கல்வியை வழங்கும் இலவச குருகுலங்கள் செயல்பட்டு வருகின்றன. திண்டுக்கல் ஸ்ரீ சத்ய சாய் மீனாட்சிநிகேதன் குருகுலத்தில் 6-ம் வகுப்பு முதல் பிளஸ்-1 வரை 54 மாணவிகளுக்கு கல்வி, உணவு, புத்தகங்கள், தங்குமிடம் உள்ளிட்டவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

கொடைக்கானல் ஸ்ரீ சத்ய சாய் ஆனந்தநிகேதனத்தில் 46 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

கொடைக்கானல் சாய் ஸ்வஸ்த்ய கேந்திரா மூலம் இலவச மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாதந்தோறும் சுமார் 600 பேர் பயனடைந்து வருகின்றனர். கடந்த 3 ஆண்டுகளில் சுமார் 13 ஆயிரம் பேர் இச்சேவையை பெற்றுள்ளனர்.

மயிலாடுதுறையில் புதிய மருத்துவமனை

மயிலாடுதுறையில் அமைக்கப்படும் 60 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை மூலம் அப்பகுதியில் வசிக்கும் சுமார் 11.8 லட்சம் மக்களுக்கு இலவச மருத்துவ சேவையை கொண்டு சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

தருமை ஆதீனம் சிவகுருநாத தம்பிரான், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கார்த்திக் கே. உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ ராதா ருக்மணி சமேத ஸ்ரீ வேணுகோபால் சுவாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் விழா





மாதவரம், அக்.05-
மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சி சிங்கிலிமேடு கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ராதா ருக்மணி சமேத ஸ்ரீ வேணு கோபால் சுவாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் சம்ப்ரோக்ஷ விழா ஆலய நிர்வாகிகள் தலைவர் உமாபதி, செயலாளர் பிரபாகரன், பொருளாளர் விஷ்ணு குமார், துணைத் லைவர் விஸ்வ நாதன், துணை செயலாளர் குமரவேல், ஆலோசகர் நாகதாஸ் ,ஆன்மீக சிந்தனையாளர் சிவபாலகிருஷ்ணன் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் கோபூஜை, யாகசாலை பூஜை,சங்கல்பம், மஹா பூர்ணாஹூதி உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் நடைபெற்றது. பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று கோயில் விமானத்திற்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பித்து பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர். இதனைத்தொடர்ந்து மூலவர்களுக்கு சம்ப்ரோக்ஷம் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் புழல் ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் பெ.சரவணன், முன்னாள் விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் பாரதி சரவணன், ஆன்மீக சேவகர் பால்ராஜ்லு உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

# பொன்னாபுரத்தில் திமுகவினர் தீவிர வாக்கு சேகரிப்பு





கிருஷ்ணகிரி, அக்.05-
கழகத் தலைவர் மு க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும், கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் ஆலோசனை யின்படியும், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாராபுரம் மேற்கு ஒன்றியம், பொன்னாபுரம் ஊராட்சியில் தேர்தல் பிரசாரப் பணிகள் நடைபெற்றன.

பொன்னாபுரம் ஊராட்சியின் கருங்காலிவலசு, நாட்டுக்கல்பாளையம் கிராம பூத் எண் 55 பகுதிகளில், கழக நிர்வாகிகள் மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகளுடன் இணைந்து, தாராபுரம் சட்டமன்ற தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் திருமதி S. சுகன்யா (Suganya Manivasagam) அவர்களுக்கு ஆதரவாக உதயசூரியன் சின்னத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்வில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன், பொன்னாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் தலைமையில் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தனர்.

இந்நிகழ்வில் கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர் அஸ்லாம், முன்னாள் நகர்மன்ற தலைவர் பரிதா நவாப், முன்னாள் நகர செயலாளர் நவாப், மாநில விவசாய அணி டேம் வெங்கடேசன், மாவட்டத் துணைச் செயலாளர் கோவிந்தசாமி, பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், ஒன்றிய செயலாளர் மகேந்திரன், கேபிள் சின்னசாமி உள்ளிட்ட கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகளும், பொன்னாபுரம் ஊராட்சி கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

பொன்னாபுரம் ஊராட்சியின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற இந்த பிரசாரத்தில், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பொதுமக்களை சந்தித்து வழக்கறிஞர் சுகன்யாவுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



# வன உயிரினங்களின் "வாழ்விடங்களை இணைத்தல் மற்றும் வன உயிரினங்கள் செழித்தல் குறித்த விழிப்புணர்வு

திருப்பத்தூர், அக்.05-
தமிழ்நாடு வனத்துறை திருப்பத்தூர் வனக்கோட்டம். திருப்பத்தூர் வனச்சரகத்தின் சார்பாக ஏலகிரி மலையில் வன உயிரின வார விழாவினை முன்னிட்டு, 03.10.2026-ம் தேதி வன உயிரினங்களின் "வாழ்விடங்களை இணைத்தல் மற்றும் வன உயிரினங்கள் செழித்தல் " ("Connecting Habitats, Thriving Wildlife") குறித்த விழிப்புணர்வு திருப்பத்தூர் வனக்கோட்ட களப் பணியாளர்கள், பசுமை தாய்நாடு அறக்கட்டளை தன்னார்வ தொண்டு நிறுவனம், பறவை குழு திருப்பத்தூர் மற்றும் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி மாணவ-மாணவியர் கலந்துக் கொண்டு நெகிழி குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. முகாமில், வனப்பகுதிகளில் மற்றும் வனச் சாலையோரங்களில் இருந்த நெகிழிகள் அப்புறப்படுத்தப்பட்டது.

ஏலகிரிமலை செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு நெகிழி மூலம் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் வன விலங்குகளுக்கு ஏற்படும் தீங்கு குறித்தும், வன உயிரினங்களின் முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வு நோட்டீஸ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், திருப்பத்தூர் வனச்சரக அலுவலர் K.குமார் மற்றும் சிங்காரப்பேட்டை வனச்சரக அலுவலர் P.சதீஸ்குமார், திருப்பத்தூர் வனக்கோட்ட களப் பணியாளர்கள், M.P.சத்தியராஜ் பசுமை தாய்நாடு அறக்கட்டளை தன்னார்வ தொண்டு நிறுவன தலைவர், பறவை குழு செயலாளர்கள் திருமலைவாசன், நிரஞ்சன், இத்திரிஸ், மற்றும் உறுப்பினர்கள் கல்லூரி மாணவ மாணவியர் கலந்துக் கொண்டனர்.





■ நீலகிரி மாவட்டம் குன்னூர் தாலுகா வெலிங்டன் கண்டோண்மெண்ட் பகுதிக்கு உட்பட்ட ஜெயந்திநகர் கிராமத்தில் அமைந்துள்ள ராதேகிருஷ்ணர் திருக்கோவிலில் புரட்டாசி மாதம் மூன்றாவது சனிக்கிழமை பூஜை மிக சிறப்பாக நடைபெற்றது. இதில் பக்தர்கள் கலந்து கொண்டு ராதேகிருஷ்ணர் தரிசனம் பெற்றனர்.அதன் பிறகு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டன.

# சூளைமேனியில் பட்டியலின பெண்ணை திருமணம் செய்து ஏற்றிய மாற்று சமூகத்தை சேர்ந்த இளைஞர் கைது



திருவள்ளூர், அக்.05-
ஊத்துக்கோட்டை அருகே சூளைமேனி கிராமத்தை சேர்ந்த முனுசாமி (வ-31) என்பவர் 43,பணபாக்ககம் கிராமத்தை சேர்ந்த கண்ணம்மா பட்டியலின பெண்ணை காதலித்து திருமணம் செய்து ஏமாற்றி சாதிய வண்கொடுமை செய்ததாக மகளீர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் மகளீர் காவல்நிலைய ஆய்வாளர் தமிழ்செல்வி முனுசாமியை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

# குச்சனூர் சனீஸ்வர பகவான் கோயிலில் பக்தர்களிடம் நூதன முறையில் வசூல்?

## பக்தர்களின் குற்றச்சாட்டுகள் இந்து சமய அறநிலையத்துறை நடவடிக்கை எடுக்க கோரிக்கை



தேனி, அக்.05-
தேனி மாவட்டம், குச்சனூர் பேரூராட்சி பகுதியில் உள்ள அருள்மிகு சனீஸ்வர பகவான் கோயிலுக்கு வரும் பக்தர்களிடம் பல்வேறு வகைகளில் கூடுதல் தொகை வசூலிக்கப்படுவதாக பொது மக்கள் மற்றும் பக்தர்கள் தரப்பில் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.கோயிலில் தட்டில் வைக்கப்படும் பழம், தேங்காய் உள்ளிட்ட பொருட்களின் உண்மையான மதிப்பு ரூ.40-க்கும் குறைவாக இருக்கும் நிலையில், அவை ரூ.100க்கு வழங்கப்படுவதாக பக்தர்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகிறது. மேலும், தேங்காய் உடைப்பது, உடைத்த தேங்காயை வைத்து பக்தர்களுக்கு கிரக கலிப்பு செய்வதாகக் கூறி பணம் வசூலிப்பது உள்ளிட்ட பல்வேறு முறைகளிலும் பக்தர்களிடம் வசூல் நடைபெறுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதேபோல், கோயிலில் பணிபுரியும் காவலர்/ வாட்ச்மேன் ஒருவர் தனது பணிப்பொறுப்பை மீறி அதிகாரம் செலுத்துவதாகவும்தன்னிச்சையாக செயல்படுவதாகவும் பொதுமக்கள் தரப்பில் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அதிகாரிகள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

கோயில் நிர்வாகத்தின் கீழ் நடைபெறுவதாகக் கூறப்படும் இத்தகைய செயல்பாடுகள் குறித்து கோயில் சுபிதா செயல் அலுவலர் (EO) ஏன் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வியும் பக்தர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

கோயிலில் நடைபெறும் முறைகேடுகளை தட்டிக் கேட்பதற்காகத்தான் அதிகாரிகள் இருக்க வேண்டும்; அவற்றை கண்டுகொள்ளாமல் இருப்பதற்காக அல்ல என பொதுமக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் நேரடியாக விசாரணை நடத்தி, பக்தர்களிடம் முறைகேடான வசூல் நடைபெறுகிறதா என்பதையும், கோயில் பணியாளர்களின் அதிகார துஷ்பிரயோகம் குறித்த புகார்களையும் ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# சாம்பல்பட்டி ஸ்ரீ கணிச்சி பெருமாள் ஆலயத்தில் சிறப்பு அபிஷேகம்

கிருஷ்ணகிரி, அக்.05-
கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தாலுகா, சாம்பல்பட்டி ஊராட்சி ஸ்ரீ கணிச்சி பெருமாள் ஆலயத்தில் புரட்டாசி மாத மூன்றாம் சனிக்கிழமையையொட்டி சிறப்பு அபிஷேகம், ஆராதனை நடைபெற்றது. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதையொட்டி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது; முன்னதாக நடைபெற்ற ஊர்வலத்தில் பெண்களின் வள்ளி கும்மியாட்டம் நடைபெற்றது.

ரமேஷ், விஜயலட்சுமி, மாதவன், மாதையன், தேவராஜ் உள்ளிட்டோர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.



# கொட்டும் மழையிலும் பனிமூட்டங்கள் நடுவில் தங்களுடைய குடும்பம் மற்றும் நண்பர்களுடன் ஆடி பாடி மகிழ்ந்த சுற்றுலா பயணிகள்

ஊட்டி, அக்.05-
மலைகளின் இளவரசி என அழைக்கப்படும் கொடைக்கானலுக்கு பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் குளிர்ந்த கால நிலையை அனுபவிப்பதற்காக வருகை புரிகின்றனர்.

குறிப்பாக தற்போது பனிமூட்டங்களும் சாரல் மழையும் அதில் அழக மேக கூட்டங்களில் இருந்து மெல்ல மெல்ல வெளியேறும் சூரியனும் கொடைக்கானலுக்கு சுற்றுலா வந்த சுற்றுலாப் பயணிகளுக்கு விருந்தளிக்கும் வகையில் அமைந்தது.

குறிப்பாக பசுமை பள்ளத்தாக்கு, மோயர் சதுக்கம், தூண்பாறை, குணா குகை, பைன் மர காடுகள் போன்ற சுற்றுலாத் தலங்களில் மூன்று காலநிலை மாறி மாறி வந்த நிலையில் அதனைக் கண்டு ரசித்தும் பனிமூட்டங்கள் நடுவில் நின்று ரசித்து தங்களுடைய குடும்பத்துடன் புகைப்படம் எடுத்து மகிழ்ந்து வருகின்றன

மேலும் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள நட்சத்திர ஏரியில் படகு சவாரி செய்வது மட்டுமல்லாமல் அதனை சுற்றி சைக்கிள் சவாரி மற்றும் குதிரை சவாரி செய்து மகிழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.





# குன்றத்தூர் ஒன்றிய ஆதனூர் ஊராட்சியில் காந்தி ஜெயந்தி முன்னிட்டு கிராம சபை கூட்டம்

ஆதனூர், அக்.05-
காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றுக்கு உட்பட்ட ஆதனூர் ஊராட்சி அலுவலகத்தில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது இதில் ஒன்றிய கவுன்சிலர் மலர்விழி தமிழ் அமுதன், துணைத் தலைவர் ரவி, ஊராட்சி மன்ற செயலர் மற்றும் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்கள் ஆகியோர் கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டனர் கூட்டத்தில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் பகுதிக்கு தேவையான அடிப்படை வசதிகள் சாலை குடிநீர், மின்விளக்கு, ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தனர். மேலும் கூட்ட த்தில் கவிஞர் கண்ணதாசன் குடியிருப்பு நல சங்கம் சார்பில் அதன் தலைவர் முரளிதரன், பொருளாளர் நாராயணன், சங்க உறுப்பினர்கள் ஸ்ரீராம், லிங்க துரை, ஆகியோர் கலந்துகொண்டு ஒன்றிய கவுன்சிலர் தமிழ் அமுதன் அவர்களிடம் தங்கள் பகுதி கோரிக்கைகளை மனுவாக அளித்தனர் அதற்கு உடனடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர்



# தேசிய தன்னார்வ இரத்ததான தினம்: கிருஷ்ணகிரியில் இரத்ததான முகாம்

கிருஷ்ணகிரி, அக்.05-
இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி கிருஷ்ணகிரி மாவட்ட கிளை மற்றும் யூத் ரெட் கிராஸ், அரசு ஆடவர் கலைக்கல்லூரி இணைந்து தேசிய தன்னார்வ இரத்ததான தினத்தை முன்னிட்டு இரத்ததான முகாம் நடத்தினர். முகாமை கல்லூரி முதல்வர் முனைவர் V.அனுராதா தொடங்கி வைத்தார்; S.செபாஸ்டியன், N.செந்தில்குமார், முனைவர் G.V.குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மருத்துவர் வசந்தகுமார் தலைமையிலான மருத்துவக் குழுவினர் இரத்தம் சேகரித்து, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இரத்த வங்கிக்கு அனுப்பினர்.

ரெட் கிராஸ் மாவட்ட செயலாளர் N.செந்தில்குமார் 71-வது முறையாகவும், பேராசிரியர் கதிரவன் 35-வது முறையாகவும் இரத்ததானம் வழங்கினர்; ஏற்பாடுகளை முனைவர் T.குமரன் செய்திருந்தார்.

# வெலிங்டன் கண்டோண்மென்டில் ஸ்வச்சதா ஹி சேவா -2026 தூய்மை விழிப்புணர்வு நிகழ்ச்சி



நீலகிரி, அக்.05-

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கன்டோன்மென்டில் "ஸ்வச்சதா ஹி சேவா 2026" தூய்மை விழிப்புணர்வு நிகழ்ச்சி காந்தி ஜெயந்தி விழா

குன்னூர்: வெலிங்டன் கன்டோன்மென்ட் போர்டு சார்பில் "ஸ்வச்சதா ஹி சேவா 2026" மற்றும் "ஸ்வச்ச் பாரத் திவஸ்" தூய்மை விழிப்புணர்வு நிகழ்ச்சி காந்தி ஜெயந்தி விழா வெலிங்டன் ஏரிப் பகுதியில் சிறப்பாக நடைபெற்றது. செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 17 வரை நடைபெறும் தூய்மை இயக்கத்தின் ஒரு பகுதியாக, இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு எம்.ஆர்.சி. கமாண்ட் பிரிகேடியர் கன்டோன்மென்ட் தலைவர் கிருஷ்ணந்து தாஸ் கன்டோன்மென்ட் முதன்மை நிர்வாக அதிகாரி கிண்டியா தலைமையிலும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நியமன உறுப்பினர் ஷீபா, சுகாதார மேற்பார்வையாளர் ராதாகிருஷ்ணன், சுகாதார ஆய்வாளர் பழனிசாமி, அலுவலக சூப்பிரண்ட் செந்தில்குமார் முன்னாள் துணைத் தலைவர் வினோத் குமார் முன்னாள் உறுப்பினர்கள் மார்ட்டின். துரைராஜ். ஸ்ரீனிவாசன் செபாஸ்டின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதையொட்டி வெலிங்டன் கன்டோ ன்மென்ட் பகுதிகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ராணுவத்தினர், கன்டோ ன்மென்ட் ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து சாலைகள் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளை தூய்மைப்படுத்தினர். குப்பைகளை முறையாக அகற்றுதல், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருத்தல் மற்றும் சுகாதாரத்தை பேணுதல் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், நிகழ்ச்சியில் பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தூய்மை பணிகளில் சிறப்பாக செயல்பட்டவர்களை பாராட்டும் வகையில் அவர்களுக்கு விருதுகள் எம் ஆர் சி கமாண்ட் முதன்மை நிர்வாக அதிகாரி வழங்கி சிறப்பிக்கப்பட்டனர்.

கன்டோன்மென்ட் பகுதியில் தங்களது வீடுகளை தூய்மையாகவும் சுகாதாரமாகவும் சிறப்பாக பராமரித்து வரும் சிறந்த வீடுகள் தேர்வு செய்யப்பட்டு, அந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு பாராட்டு மற்றும் விருதுகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் பொதுமக்களிடையே தங்களது வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சி அமைந்தது.

தொடர்ந்து, மகாத்மா காந்தியடிகளின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தூய்மை மற்றும் சுகாதாரத்தை மக்கள் மாற்ற வேண்டும் என்பதன் அவசியம் குறித்து நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ராணுவ அதிகாரிகள், கன்டோன்மென்ட் ஊழியர்கள், பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். அனைவரும் இணைந்து தூய்மையான, சுகாதாரமான மற்றும் பசுமையான வெலிங்டனை உருவாக்க உறுதுணையாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியின் நிறைவில் அலுவலக சூப்பிரண்ட் செந்தில்குமார் நன்றியுரை வழங்கினார்.



# தேவகோட்டை அருகே அடிப்படை வசதிகள் கோரி கிராம சபையில் மனு: மேல் அதிகாரிகள் வராததால் கோரிக்கைகளை முறையிட முடியாமல் கிராம மக்கள் விரக்தி

தேவகோட்டை, அக்.05-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகே கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொடுவூர் ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது. இதில் கொடிக்குளம் கிராம மக்கள் தங்களது அடிப்படை வசதிகளை நிறைவேற்றக் கோரி மனு அளித்தனர்.

அப்போது கிராம மக்கள் கூறுகையில், 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் முறையாக பணி வழங்கப்படுவதில்லை என்றும், தங்களது முக்கிய வாழ்வாதாரமான விவசாயப் பணிகளுக்கு உதவும் வகையில் வாய்க்கால்களை தூர்வார வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், தண்ணீர் வசதி போதுமானதாக இல்லை என்றும், அருகே உள்ள சிறுகானூர் தெற்கு குடியிருப்பில் டிரான்ஸ்பார்மர் பழுதடைந்து 15 நாட்களாகியும் சரிசெய்யப்படாததால் மின்சார வசதி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.




கிராமத்திற்கு முறையான சாலை வசதி இல்லாததால் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகள் கடும் சிரமத்தை சந்தித்து வருவதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

மேலும், நீண்ட காலமாக வீடுகள் கட்டி வசித்து வரும் தங்களை, வீடுகளை காலி செய்யுமாறு வனத்துறையினர் கூறி வருவதாக கிராம மக்கள் குற்றம்சாட்டினர். தாங்கள் வசித்து வரும் இடங்களுக்கே இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

தங்களது கோரிக்கைகளை நேரடியாக எடுத்துரைத்து மனு அளிக்க கிராம சபைக் கூட்டத்திற்கு உயர் அதிகாரிகள் யாரும் வராதது வருத்தமளிப்பதாக தெரிவித்த கிராம மக்கள், மாவட்ட ஆட்சியர் தங்களது கோரிக்கைகளை பரிசீலித்து அடிப்படை வசதிகளை செய்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

# கிராமசபை கூட்டத்தில் சமூக நல ஆர்வலர்கள் கூட்டமைப்பு தலைவர் எஸ்.கே.வரதராஜன் வருவாய்த்துறை அதிகாரியிடம் மனு வழங்கல்



மாதவரம், அக்.05-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி ஸ்ரீ கெங்கையம்மன் ஆலய வளாகத்தில் மகாத்மா காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராமசபை கூட்டம் ஊராட்சி செயலர் கே.ஆர். சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சமூக நல ஆர்வலர்கள் கூட்டமைப்பு தலைவர் லைன் எஸ்.கே.வரதராஜன் கலந்துகொண்டு பாடியநல்லூர் ஊராட்சியில் உள்ள அண்ணாதெரு குறுக்கு சந்து ஆக்கிரமைப்பை மாவட்ட ஆட்சியர் கையெப்பம் இட்டு அளவீடு செய்து அது பொது வழி என்று சொல்லியதை அந்த இடத்தில் பொதுவழி என்று போர்டு வைக்க வேண்டிய மனுவையும், மொண்டியம்மன் நகர் எம்.ஏ.கோயில் தெருவில் உள்ள ஆக்கிரமைப்புகளை அகற்ற வேண்டிய மனுவையும், மழைநீர் கால்வாய்களில் கழிவுநீர் விடுவதை அனைத்து பகுதிகளிலும் தடுத்து நிறுத்த வேண்டிய மனுவையும், திருவள்ளூர் சாலை அருகே உள்ள திருமண மண்டபங்களில் இருந்து கொட்டபடும் கழிவுகளை தடுக்க வேண்டும் அதற்கு மண்டப உரிமையாளர்களை அழைத்து பொது இடத்தில் ஆலோசனை கூட்டம் நடத்திட வேண்டிய மனுவையும் வருவாய்த்துறை அதிகாரியிடன் அளித்தனர்.



# முக்கம்பாக்கம் ஊராட்சி செயலைரை இடமாற்றம் செய்யகோரி கிராம சபை கூட்டத்தில் சமூகஆர்வலர் கோரிக்கை

திருவள்ளூர், அக்.05-

கும்முடிபூண்டியில் உள்ள 63 ஒன்றிய ஊராட்சிகளில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

அதனை தொடர்ந்துஇக்கூட்டத்தல் முக்கரம்பாக்கம் ஊராட்சி செயலர் மக்களின் வரிபணத்தில் பலமுறைகேடுகளில் ஈடுபட்டதாக எழுந்த புகாரின் காரணமாக கடந்த மாதங்களுக்கு முன்பதாக இடாமாற்றம் செய்யபட்டதாகவும் மீண்டும் தனது பணபலத்தை பயன் படுத்தி தனக்கு நெறுக்மான அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து முக்கரம்பாக்கம் ஊராட்சிக்கு சிபாரிசுடன் வந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் ஏற்கனவே முறைகேட்டில் ஈடுப்பட்டார் என இடமாற்றம் செய்யப்பட்டவர் தற்போது இன்னும் அதிகமான முறைகேடுகளில் ஈடுபடுவார் எனவும் இவரை இடமாற்றம் செய்யவேண்டும் என கிராமசபை கூட்டத்தில்சமூக ஆர்வலர் ஏழுமலை கோரிக்கை அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பார்களா அப்பகுதிமக்கள் எதிர்ப்பார்ப்பு

# தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் மற்றும் கோம்பை பகுதிகளில் நடைபெற்ற புரட்டாசி 3-வது சனிக்கிழமை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றது



தேனி, அக்.05-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் அருள்மிகு ஸ்ரீ சீனிவாச பெருமாள் கோவிலில், புரட்டாசி மாத மூன்றாவது சனிக்கிழமையை முன்னிட்டு பெருமாள் வைகுண்ட நாதர் அலங்காரத்தில் எழுந்தருளி பொதுமக்களுக்கும் பக்தர்களுக்கும் சிறப்பு தரிசனம் அளித்தார். தொடர்ச்சியாக, சீனிவாச பெருமாள் கோயில் அன்ன தான அறக்கட்டளையின் சார்பாக பி. ஆர். பி. பாண்டியன் மற்றும் அவரது குடும்பத்தார் தலைமையில் பக்தர்களுக்கு அன்னதானம் சிறப்பாக வழங்கப்பட்டது. அதே போல்

கோம்பை திருமலைராயர் பெருமாள் கோவிலில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் கூடிய ஸ்ரீ ரங்கநாதர் பள்ளிகொண்ட பெருமாளாக காட்சியளித்தார். பெருமாளைத் தரிசிக்க அதிகாலை முதலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்ததால், கோவில் வளாகத்தில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. சின்னமனூர் ஸ்ரீ கோகுல நற்பணி மன்றம் சார்பில் அன்னதானம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

போக்குவரத்து நெரிசல் பக்தர்கள் அவதி"

கோவில் நிர்வாகம் மற்றும் காவல்துறையினர் சார்பில் கூட்டத்தை நெறிப்படுத்தவும், வாகனங்களை நிறுத்தவும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் சரிவர செய்யப்படவில்லை.

இதனால் அப்பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

நீண்ட நேரம் வெயிலிலும் நெரிசலிலும் காத்திருந்ததால், குறிப்பாக பெண்கள், முதியவர்கள் மற்றும் குழந்தைகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

புரட்டாசி மாதத்தின் அடுத்தடுத்த வாரங்களிலும் பக்தர்களின் வருகை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, வரும் வாரங்களில் இது போன்ற போக்குவரத்து நெரிசலும் பொதுமக்களுக்கான அலைக்கழிப்பும் ஏற்படாமல் இருக்க, கோவில் நிர்வாகமும் காவல்துறையினரும் இணைந்து முறையான பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து சீரமைப்பு ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று பக்தர்களும் சமூக ஆர்வலர்களும் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றியம், காரப்பட்டு அரசு துணை சுகாதார நிலையத்தில், பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் மற்றும் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் மருத்துவச் சேவைகள், சிகிச்சை முறைகள், மருந்துகளின் இருப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்,இ.ஆ.ப., அவர்கள் (03.10.2026) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் தொற்று நோய் அலுவலர் அரவிந்தராஜ், ஆம்பூர் வட்டாட்சியர் பாரதி மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# செவிலியர் பணியிட விண்ணப்பங்களில் விடுபட்ட சான்றிதழ்களை சமர்ப்பிக்க அறிவுறுத்துதல்




தேனி, அக்.05-

தேசிய நலவாழ்வுக் குழுமம், தேனி சுகாதார மாவட்டத்திற்குட்பட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனை மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள தற்காலிக ஒப்பந்த அடிப்படையிலான செவிலியர் பணியிடங்களுக்கு மாவட்ட நலவாழ்வு சங்கத்தின் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட விண்ணப்பங்களில் விடுபட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை (உதாரணமாக: தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் பதிவு சான்று, மதிப்பெண் சான்று, ஆதார், குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, கல்வி சான்றுகள் மற்றும் பிற ஆவணங்கள் / சான்றுகள்) நகல்களின் விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.மேற்கண்ட தற்காலிக ஒப்பந்த அடிப்படை செவிலியர் பணியிடங்களுக்கான விண்ணப்பங்களில் விடுபட்ட சான்றிதழ் நகல்களின் விவரங்களை தேனி மாவட்ட வலைதளம் https://theni.nic.in/notice_category/recruitment மூலம் அறிந்து கொள்ளலாம்.

விடுபட்ட சான்றிதழ் நகல்களின் விவரங்களை 04.10.2026 அன்று (காலை:09.00 மணி முதல் மாலை: 05.00 மணி வரையிலும்) மற்றும் 05.10.2026 அன்று நண்பகல் 12 மணிக்குள் மாவட்ட சுகாதார அலுவலகம், தேனி என்ற அலுவலக முகவரியில் நேரில் சமர்ப்பிக்க வேண்டும். நண்பகல் 12 மணிக்கு பின்னர் பெறப்படும் சான்றுகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.



# பம்மதுகுளம் பிரசன்ன வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் புரட்டாசி திருவிழா

மாதவரம், அக்.05-

மாதவரம் தொகுதி பம்மதுகுளம் கிராமம் அன்னை இந்திரா நகரில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீபிரசன்ன வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் 89-ம் ஆண்டு 3-வது வார சனிக்கிழமை புரட்டாசி மாத திருவிழா ஆலய நிர்வாகிகள் தலைவர் அன்பழகன், பொதுச் செயலர் முனுஸ்வாமி, செயலாளர்கள் முனியப்பன், திருப்பதி, சங்கர், பொருளாளர் பிரகாஷ், துணைத்தலைவர்கள் மனோகர், தேவேந்திரன், சதாசிவம், பன்னீர்செல்வம், துணைசெயலர்கள் பாலகிருஷ்ணன், ரவி மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மூலவருக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து பின்னர் வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபா ராதனை காண்பிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து உற்சவர் சிறப்பு அலங்காரம் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் பஜனையுடன் மேளதாள வாணவேடிக்கைவுடன் ஸ்ரீபெரம்பத்தூர் ஸ்ரீ வரதயத்திராஜ ஜீயர் சுவாமிகள் அருளாசியுடன் மற்றும் மீஞ்சூர் புங்கம்பேடு மடாதிபதி ஸ்ரீ உ.வே.சுதர்சனம் ஆச்சாரியர் சுவாமிகள் தலைமையில் திருவீதி உலா நடைபெற்றது. இதில் ஆலய சட்ட ஆலோசகர்கள் ஜனார்த்தனம், பன்னீர்செல்வம், பார்த்தசாரதி, தாமரைக்கண்ணன், கமல்ராஜ், பிரியதர்சினிகபிலன் உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு நெய்தீபம் ஏற்றி அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது.

# மின்சாரம் தாக்கி உயிரிழந்த 2 குழந்தைகள் – அரசு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க சீமான் கோரிக்கை



சென்னை, அக்.05–

'கமுதி அருகே அரசு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட மின்கசிவில் சிக்கி பலியான 2 குழந்தைகளின் குடும்பத்துக்கு தமிழக அரசு ரூ.50 லட்சம் துயர் துடைப்பு உதவியாக வழங்க வேண்டும்' என சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ராமநாதபுரம் மாவட்டம் கமுதி வட்டம் அச்சங்குளம் கிராமத்தில் தம்பி மோகன் – லதா இணையரின் 11 வயதான நிறைமதி என்ற பெண் குழந்தையும், 6 வயது பால பிரவீன் என்ற ஆண் குழந்தையும் கடந்த (30.09.2026) அன்று காலை 8 மணி அளவில் அந்தப் பகுதியில் உள்ள அரசு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட மின்கசிவால் மின்சாரம் தாக்கி உயிரிழந்த துயரச் செய்தியறிந்து வேதனையுற்றேன்.

உயிருக்கும் மேலாக நேசித்து வளர்த்த இரண்டு பிஞ்சு குழந்தைகளையும் பறிகொடுத்து விட்டு ஆற்ற முடியாத பெருந்துயரத்தில் வாடும் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் என்னுடைய ஆறுதலைத் தெரிவித்து துயரத்தில் பங்கெடுக்கிறேன்.

இந்த விபத்துக்கு காரணமான, அந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அரசு மின் இணைப்பு இல்லாமல் திருட்டுத்தனமாக மின்சாரம் எடுத்த ஊராட்சி செயலர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கடந்த 8 ஆண்டு காலமாக மின்சாரத் திருட்டை ஆதரித்த மின்வாரிய அலுவலர் மீதும் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறிப்பாக, செயல்படாமல் இருந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பே ஏற்பட்ட மின்கசிவைச் சரிசெய்யக்கோரி அந்த கிராம இளைஞர்கள் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் புகார் கொடுத்துள்ளனர். அப்போதே நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த இரண்டு பச்சிளம் குழந்தைகளின் உயிர் பறிபோய் இருக்காது.

புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாகச் செயல்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரும், தொடர்புடைய மின்வாரிய ஊழியர்களுமே இந்த இரண்டு பிஞ்சுகளின் உயிரிழப்புக்கு முதன்மை காரணமானவர்கள். இதனால் தமிழக அரசு உயிரிழந்த குழந்தைகளுக்கு ரூபாய் 25 லட்சம் வீதம் 2 குழந்தைகளுக்கும் சேர்த்து ரூபாய் 50 லட்சத்தைத் துயர் துடைப்பு நிதியாக வழங்க வேண்டும் எனவும்,

புகார் அளித்தும் கவனக்குறைவாகச் செயல்பட்ட அரசு அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உரிய துயர் துடைப்பு உதவிகளைச் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.' எனத் தெரிவித்துள்ளார்.

# "நாங்கள் நியாயம் கேட்கிறோம்" – மதுராந்தகம், தாராபுரம் வாக்காளர்களுக்கு பழனிசாமி வேண்டுகோள்

சென்னை, அக்.05–

'நான் பெரிய அரசியல்வாதியின் வாரிசோ, மிகப் பெரிய சினிமா நட்சத்திரமோ கிடையாது. ஆனா எனக்கு அடுக்கு மொழியில் பக்கம் பக்கமாக, ரசிகர்களை மயக்குவது போல, போலி வசனங்கள் பேசத் தெரியாது' என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'நான் பெரிய அரசியல்வாதியின் வாரிசோ, மிகப் பெரிய சினிமா நட்சத்திரமோ கிடையாது. நான் உங்களில் ஒருவன். உங்கள் ஊரில், தெருவில், வீட்டில், நீங்கள் தினசரி சாதாரணமாக பாக்கும் அண்ணன், அப்பா, சித்தப்பா, பெரியப்பா மாதிரி, எளிய மனிதன், இந்த எடப்பாடி பழனிசாமி.

எனக்கு நமது மக்கள் படும் கஷ்டம் தெரியும், நம்ம ஜனத்தோட அன்றாட வாழ்க்கை தெரியும், நமது பிரச்சினைகளை தெரியும். ஆனா எனக்கு அடுக்கு மொழியில் பக்கம் பக்கமாக, ரசிகர்களை மயக்குவது போல, போலி வசனங்கள் பேசத் தெரியாது.

ஏனென்றால், நான் கீழே இருந்து வந்தவன். அதனாலதானோ என்னவோ, மற்ற எல்லா கட்சி தலைவர்களை விட, இந்த விவசாயி பழனிசாமிக்கு எதிராக, அத்தனை சூழ்ச்சிகள். எனக்கு பின்னால், 100 வருடத்திற்கு இந்த இயக்கம் இருக்கும் என்று சொன்ன, ஜெயலலிதாவின் சின்னம், இந்த இரட்டை இலை.

இதை காப்பாற்ற நினைத்தது நம்முடைய தவறா? இல்லை, உங்களை போல சாதாரண குடும்பத்தில் பிறந்தது என்னுடைய தவறா?



புரட்சி தலைவரும், புரட்சித் தலைவியும், கட்டிக்காத்த இந்த இயக்கம், சுயநலவாதிகளின் சூழ்ச்சிக்கு பலியாக கூடாது என்று, இந்த நிமிடம் வரை நானும், தலைவரின் ரத்தத்தின் ரத்தங்களும், போராடிக் கொண்டு இருக்கிறோம்.

ஆனால், அதற்கு எதிராக எத்தனை சோதனைகள்? எத்தனை சூழ்ச்சிகள்? எத்தனை துரோகங்கள்? இந்த இயக்கத்தை சூறையாட எத்தனை நாடகங்கள்? இன்று இந்த இரட்டை இலையை விமர்சனம் செய்ய நினைக்கிற தமிழக வெற்றிக் கழகத்துக்கு கூட, நாம் கரூர் விவகாரத்தில் நல்லது தானே நினைத்தோம்?

அதுதான் நாம் செய்த குற்றமா ? அதுக்கான பிரதிபலனாகத்தான் நமது எம்எல்ஏக்களை பேரம்பேசி திருடிக்கொண்டு போக பார்க்கிறார்களா?

உயிரை கொடுத்து உழைத்த 6,000 கட்சி நிர்வாகிகளைப் பற்றியோ, இவங்களை நம்பி வெற்றிபெற வைத்த லட்சக்கணக்கான மக்களைப் பற்றியோ ஒரு நிமிடம் யோசிச்சிருந்தால்கூட, இப்படி செய்ய மனது வந்திருக்குமா?

அன்பு மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதி மக்களே, நாங்கள் நியாயம் கேட்கிறோம். அன்பு பெரியோர்களே, தாய்மார்களே, சகோதர–சகோதரிகளே, உங்களிடம் நியாயம் கேட்கிறோம். எம்ஜிஆர், ஜெயலலிதா சார்பில் உங்களிடம் நியாயம் கேட்கிறோம்.

இதற்கான தீர்ப்பை நீங்களே கொடுக்க வேண்டும். நீங்கள் கொடுக்கப்போகும் தீர்ப்பு, இனி எம்எல்ஏக்களை, குதிரை பேரத்தில் விலை பேசும் தவெகவுக்கும், விலை போக நினைத்த துரோகிகளுக்கும், வாழ்நாள் பாடமாக, இந்த பச்சை துரோகத்துக்கு முற்றுப்புள்ளியாக இருக்கட்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

# 80 லட்சம் இளைஞர்கள் மது பழக்கத்துக்கு அடிமை: சவுமியா அன்புமணி வேதனை

நாகர்கோவில், அக்.05–

தர்மபுரி சட்டமன்ற உறுப்பினரும், பா.ம.க. சட்டமன்ற குழு தலைவருமான சவுமியா அன்புமணி, இன்று காலை குமரி மாவட்டம் வந்தார். அவர் கன்னியாகுமரி பகவதியம்மன் கோயில், வடிவீஸ்வரம் அழகம்மன் கோயில், நாகர்கோவில் நாகராஜா கோயிலில் சாமி தரிசனம் செய்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது : தமிழ்நாட்டின் வற்றாத ஜீவ நதியான தாமிரபரணி ஆற்றை ஆய்வு செய்கிறோம். அதில் கழிவுகள் கலப்பதை தடுக்க என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி ஆய்வு செய்கிறோம். என்.டி.ஏ. கூட்டணியில் தான் நாங்கள் இருக்கிறோம்.

தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தலில் ஆதரவு இல்லாதது கட்சியின் கொள்கை முடிவு ஆகும். 80 லட்சம் இளைஞர்கள் மது பழக்கத்துக்கு அடிமையாகி உள்ளனர். 54 லட்சம் மாணவர்கள் குடி நோயர்கள் ஆகி உள்ளனர். பள்ளி கூட மாணவர்கள் மது பழக்கத்துக்கு உள்ளாகி உள்ளனர். இவர்கள், கல்லூரி பருவம் வரும் முன் குடிக்கு அடிமையாகி விடுவார்கள். எனவே மதுவை ஒழிக்க வேண்டும். இடைத்தேர்லுக்கு பின், நான் அமைச்சர் ஆவேனா? என்று மீண்டும், மீண்டும் கேட்கிறீர்கள். அது வதந்தி ஆகும். இவ்வாறு அவர் கூறினார்.

# 'உங்களது ரீல் நான்கே மாதங்களில் அறுந்து தொங்கிவிட்டதே' - விஜய் மீது ஸ்டாலின் விமர்சனம்

சென்னை, அக்.05–

தூயசக்தி எனத் தம்பட்டம் அடித்த உங்களது ரீல் நான்கே மாதங்களில் அறுந்து தொங்கிவிட்டதே என்று முதல்வர் விஜய்யை திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலை முன்னிட்டு, மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக ஊடக எக்ஸ் பதிவில், "CM சார்... நாடு சிரிக்கும் நான்கு மாதங்கள்! இந்த நான்கு கேள்விகளுக்குப் பதிலுண்டா...?

1. பெண்களைப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியோரைச் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் மாவட்டச் செயலாளர்களாகவும் வைத்துக்கொண்டு முதல்வர், பெண் பாதுகாவலர் போல வேடம் போடலாமா?

2. அறிவிக்கப்படாத மின்வெட்டில் இருந்து, இனி தினமும் அறிவித்துவிட்டு 8 மணிநேரம் மின்வெட்டு என்பதை நோக்கித் தமிழ்நாடு நகரவுள்ளதாக வரும் செய்திகள் உங்கள் செவிகளை எட்டவில்லையா?

3. அசையாத மரமொன்று விழுந்தது கீழே என்ற கதையாக, இடைத்தேர்தல் தோல்வியைத் தவிர்க்க நீங்கள் மணிக்கணக்கில் தெருவலம் போவது போதாமல், டிபன் கேரியரில் பணமும் போகிறதாமே? ஒரு தெருவுக்கு இவ்வளவு என வாக்குகள் விலைபேசப்படுவதாக உங்கள் ஆட்சி அமைய ஆதரவு தெரிவித்த கட்சிகளே குற்றம்சாட்டுவதற்குப் பதில் என்ன?

4. இத்தோடு, குதிரைவேக குதிரை பேரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா? அல்லது, இனியும் TVK Horse Trading-இன் அடுத்த Season தொடருமா?

தூயசக்தி எனத் தம்பட்டம் அடித்த உங்களது ரீல் இப்படி நான்கே மாதங்களில் அறுந்து தொங்கிவிட்டதே!" என விமர்சித்துள்ளார்.

# தெற்கு ரயில்வேயில் ஒரே நாளில் 1.20 டன் குப்பை அகற்றம்: மண்டலம் முழுவதும் 2,675 பேர் தூய்மைப் பணி



சென்னை, அக்.05–

தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் சார்பில் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட தூய்மையே சேவை 2026 தொடர் தூய்மைப் பணி காந்தி ஜெயந்தி நாளில் நிறைவு பெற்றது.

இதன் நிறைவு விழா மற்றும் காந்தி ஜெயந்தி விழா சென்னை சென்ட்ரல் ரயில் நிலைய வளாகத்தில் நடைபெற்றது. காந்தியின் உருவப் படத்துக்கு தெற்கு ரயில்வே பொது மேலாளர் யு.சுப்பா ராவ் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

விழாவில் அவர் பேசியதாவது: தொடர் தூய்மைப் பணி நாட்களில் தெற்கு ரயில்வே மண்டலத்தில் மொத்தம் 1,851 இடங்களில் தூய்மைப் பணிகள் நடைபெற்றன. அதில் 8,274 பேர் ஈடுபட்டனர். தீவிர தூய்மைப் பணி நடைபெற்ற 585 இடங்களில் இருந்து 65 டன் பழைய கழிவுகள் அகற்றப்பட்டன. இப்பணியில் ரயில்வே ஊழியர்கள், அலுவலர்களுடன் மாணவர்கள், பேராசிரியர்களும் ஈடுபட்டனர். தூய்மைப் பணியின்போது 42 மருத்துவ முகாம்கள் மூலம் 572 தூய்மைப் பணியாளர்கள் பயனடைந்தனர். அவர்களுக்கு பாதுகாப்பு உபகரணத் தொகுப்பும் வழங்கப்பட்டது. பணியின்போது 2,665 கிலோ பழைய இரும்பு மற்றும் தேவையில்லாத பொருட்கள் கலைப் பொருட்களாக மாற்றப்பட்டன. கடந்த அக்.1–ம் தேதி ஒரே நாளில் தெற்கு ரயில்வேயில் 2,675 பேர் பங்கேற்ற தூய்மைப் பணியால் 1.20 டன் குப்பைகள் அகற்றப்பட்டன. தெற்கு ரயில்வேயில் ஆண்டு முழுவதும் தூய்மைப் பணி மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் ரயில்வே மற்றும் ரயில்வே பாதுகாப்புப் படைப் பிரிவினரின் தேச பக்திப் பாடல்கள், நடனம், ரயில்வே பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள், அவர்களது ஓவியக் கண்காட்சி, தூய்மை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், நாடகம், மேஜிக் நிகழ்ச்சி ஆகியவை நடைபெற்றன. காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பங்கேற்ற அனை வருக்கும் சான்றிதழ், சணல் பைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் கூடுதல் பொதுமேலாளர் விபின்குமார், சென்னை ரயில்வே கோட்ட மேலாளர் சைலேந்திர சிங், கூடுதல் கோட்ட மேலாளர் அங்கூர் சவுகான், ஐ.செந்தில்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். தெற்கு ரயில்வேயில் கடந்த 9 மாதங்களில் மட்டும் 31.40 லட்சம் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன. இது 2025 செப்டம்பர் வரையிலான அளவை விட 3 சதவீதம் அதிகம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மண்டபம் அருகே 120 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல் - கடலோர காவல்படை நடவடிக்கை



ராமேசுவரம், அக்.05–

மண்டபம் அருகே வடக்கு பாக். நீரிணை கடற்பகுதியில் தடை செய்யப்பட்ட 120 கிலோ கடல் அட்டைகளை கடலோர காவல்படையினர் பறிமுதல் செய்தனர்.

மண்டபம் நிலைய கடலோரக் காவல்படையினர் ரோந்து பணியின் போது, மண்டபம் அருகே பாக். நீரிணை கடற்பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் கரையில் நின்று கொண்டிருந்த பதிவு செய்யப்படாத நாட்டுப் படகிலிருந்து சோதனையிட்டனர். சோதனையில், 6 சாக்குப் பைகளில் சுமார் 1,120 கிலோ கடல் அட்டைகள் இருந்தன.

அவற்றை பறிமுதல் செய்த கடலோர காவல்படையினர், அதனை வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர். மேலும், கடல் அட்டைகளை இலங்கைக்கு கடத்த முயன்ற கடத்தல்காரர்கள் குறித்து வனத்துறையும், மண்டபம் மெரைன் போலீஸாரும் விசாரித்து வருகின்றனர்.

# ரூ.6,750 சிறப்பு ஓய்வூதியம் வழங்க சத்துணவு, அங்கன்வாடி ஓய்வூதியர்கள் வேண்டுகோள்

விருதுநகர், அக்.05–

தேசிய மருத்துவ காப்பீடு வழங்க வேண்டும் என விருதுநகரில் நடைபெற்ற தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர் சங்கத்தின் மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கத்தின் மூன்றாவது மாநில மாநாடு விருதுநகரில் நேற்று தொடங்கியது. இரண்டாம் நாளான இன்று, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் வாஞ்சிநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இம்மாநாட்டில், வருவாய் கிராம உதவியாளருக்கு இணையாக ரூ.6,750 சிறப்பு ஓய்வூதியம் வழங்க வேண்டும், வருவாய் கிராம ஊழியர்களுக்கு நிகரான அகவிலைப்படி வழங்க வேண்டும், மருத்துவப்படி ரூ.300 வழங்க வேண்டும், தேசிய மருத்துவக் காப்பீடு வழங்க வேண்டும், 10, 20, 30 ஆண்டு பணி புரிந்தமைக்கான ஊக்க ஊதியம் நிலுவை வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# குரோம்பேட்டை அருகே சோகம்: ஏரியில் மூழ்கி 4 சிறுவர்கள் பலி: உடல்கள் மீட்பு

தாம்பரம். அக்.5–

குரோம்பேட்டை அருகே திருநீர்மலை ஏரியில் குளித்த 2 சிறுவர்கள், 2 சிறுமிகள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குரோம்பேட்டை லட்சுமிபுரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த 4 பள்ளி மாணவ, மாணவிகள் நேற்று மதியம் வீட்டின் அருகே விளையாடிக்கொண்டிருந்தனர். பின்னர், அவர்கள் அருகில் உள்ள திருநீர்மலை பெரிய ஏரி பகுதிக்கு சென்றதாக கூறப்படுகிறது. நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாததால், பெற்றோர் மற்றும் உறவினர்கள் பல்வேறு இடங்களில் தேடினர். இதற்கிடையே, இன்று காலை ஏரி பகுதியில் 4 பேரின் உடல்கள் நீரில் மிதந்த நிலையில் இருந்ததை அப்பகுதி மக்கள் பார்த்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து குரோம்பேட்டை காவல் நிலைய போலீசார் மற்றும் தாம்பரம் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று 4 பேரின் உடல்களையும் மீட்டனர். பின்னர், பிரேத பரிசோதனைக்காக தாம்பரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பினர். விசாரணையில், உயிரிழந்தவர்கள் குரோம்பேட்டை லட்சுமிபுரம் பகுதியை சேர்ந்த யுவனேஷ் (10), தேவதர்ஷன் (12), பூஜா (13) மற்றும் குஷி (13) என்பது தெரியவந்தது. இதில், யுவனேஷ் 6ம் வகுப்பும், தேவதர்ஷன் 7ம் வகுப்பும், பூஜா மற்றும் குஷி ஆகியோர் 8ம் வகுப்பும் படித்து வந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

பள்ளி விடுமுறை நாளான நேற்று 4 பேரும் ஏரியில் குளித்த போது, சேற்றில் சிக்கி நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஒரே பகுதியில் வசித்து வந்த 4 பள்ளி மாணவ–மாணவிகள் ஏரியில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் குரோம்பேட்டை பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# அக்.5, 6-ல் தமிழகத்தில் 4 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

சென்னை, அக்.05–

தமிழகத்தில் நீலகிரி, தேனி, கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய 4 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அக்.5, 6 ஆகிய தேதிகளில் இடியுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய உயரதிகாரியும், விஞ்ஞானியுமான வி.ஆர். துரை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் அடையாமடை, திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் அதிகபட்ச மழை பதிவாகியுள்ளது.

மன்னார் வளைகுடா மற்றும் அதையொட்டிய தென் தமிழக கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதுதவிர, மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோர பகுதிகள் முதல் மத்திய கிழக்கு அரபிக்கடல் வரை வட தமிழகம் மற்றும் வடகேரளம் வழியாக ஒரு காற்றழுத்தத் தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன்காரணமாக, கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் ஞாயிற்றுக்கிழமை (அக்.4) இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 25 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்.



அக்.5,6 ஆகிய தேதிகளில் நீலகிரி, தேனி, கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய 4 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும். திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 27 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்.

அக்.7,8 ஆகிய தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழகம், டெல்டா மாவட்டங்கள் மற்றும் ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர், திருச்கிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர் ஆகிய 7 மாவட்டங்களில் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்.

அக்.9,10 ஆகிய தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகரில் ஞாயிற்றுக்கிழமை, திங்கள்கிழமை (அக்.4,5) ஆகிய தேதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வெப்பநிலை:

தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161